# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1988 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க, கரையோரம் பேணல் (திருத்தச்) சட்டம்

---

*[1988, திசெம்பர் மாதம் 17 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---


*1988, திசெம்பர் 23 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டுள்ளது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

**விலை : சதம் 90** **தபாற் செலவு : சதம் 75**

## 1988 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க, கரையோரம் பேணல் (திருத்தச்) சட்டம்

சா.வ.—ஓ. 8/84

[1988, திசெம்பர் மாதம் 17 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

## 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, கரையோரம் பேணற் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டமானது 1988 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க, கரையோரம் பேணல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்கச் சட்டத்தின் 5 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கரையோரம் பேணற் சட்டத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகிறது :—

"பணிப்பாளர் III ஆம் பாகத்தின் கீழான தமது தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகள் என்பனவற்றுள் எவற்றையேனும், அரசாங்க அதிபருக்கும் வேறு அலுவலர்களுக்கும் கையளித்தல்.

5. எந்த நிருவாக மாவட்டத்தினுள் கரையோர வலயத்தின் ஏதேனுமொரு பகுதி அமைந்துள்ளதோ அந்த மாவட்டத்தின் அரசாங்க அதிபர் அல்லது ஆண்டொன்றுக்கு 24,000/- ரூபாவான அல்லது அதற்கதிகமான சம்பள அளவுக்கு உரித்துடையவரும் அவரது ஆண்டுச் சம்பள உயர்வு 600/- ரூபாவாக அல்லது அதற்கதிகமாக உள்ளவருமான வேறு எவரேனும் பகிரங்க அலுவலர், பணிப்பாளரின் எழுத்திலான அதன் சார்பிலான அதிகாரவளிப்பின்பேரிலும் பொதுப் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமையவும், இச்சட்டத்தின் III ஆம் பாகத்தினால் பணிப்பாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர் மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்கள், கடமைகள், பணிகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் அந்த நிருவாக மாவட்டத்தினுள் பிரயோகிக்கலாம், புரியலாம் அத்துடன் நிறைவேற்றலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவானது, அதன் (1) ஆம் உட்பிரிவு நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவு இடப்படுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது :—

"(1) பேரவையின் கூட்டமொன்று ஆறு மாதங்களுக்கொருமுறையாவது நடாத்தப்படுதல் வேண்டும்.".

2—எ 102770—3,520 (04/88)

முதன்மைச் சட்டவாக்கத்தின் 27அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 27அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"14 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் மீறப்படுவதன் மீது வாகனங்கள் முதலியவற்றைக் கைப்பற்றுதல்.

27அ. (1) எவரேனும் ஆளினால் 14 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக ஏதேனும் வாகனம், கலம், படகு, மரக்கலம், எந்திரத் தொகுதி அல்லது உபகரணம் பயன்படுத்தப்படுமிடத்து பொலிசு அலுவலரெவரும் அத்தகைய வாகனம், கலம், படகு, மரக்கலம், எந்திரத்தொகுதி அல்லது உபகரணம் எதனையும் அதன்மீது காணப்படும் ஏதேனும் பொருளுடன் அல்லது பதார்த்தத்துடன் சேர்த்து கைப்பற்றுவதற்கான தத்துவமுடையவராதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் கைப்பற்றப்பட்ட வாகனம், கலம், படகு, மரக்கலம், எந்திரத் தொகுதி அல்லது உபகரணம் எதுவும் அதன் விடுவிப்பை அனுமதிக்கும் நீதிமன்றக் கட்டளையொன்று பெறப்பட்டிருந்தாலன்றி விடுவிக்கப்படுதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கஞ் செய்துவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழான தவறொன்றுக்காக ஆளெவரும் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல்—

(அ) அரச ஆதனமாக இல்லாததான எந்தப் பதார்த்தம் அல்லது பொருள் எதுவும் தொடர்பாக அத்தகைய தவறு புரியப்பட்டதோ அந்தப் பதார்த்தம் அல்லது பொருள் எதுவும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய தவறு புரியப்படுகையில் பயன்படுத்தப்பட்டனவான அல்லது அதனுடன் தொடர்புபட்டனவான எல்லா வாகனங்கள், கலங்கள், படகுகள், மரக்கலங்கள், எந்திரத் தொகுதி, வேறு சாதனம் என்பனவற்றை அத்தகைய ஆள் அத்தகைய வாகனங்களை, படகுகளை, மரக்கலங்களை, அத்துடன் எந்திரத் தொகுதியைச் சொந்தமாக வைத்திருந்தாலுஞ் சரி இல்லாவிட்டாலும் சரி,

அரசுக்கு இழப்பிக்கப்படுதல் வேண்டுமென வெளிப்படுத்தி நீதிவான் கட்டளை ஆக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழ் அரசுக்கு இழப்பிக்கச் செய்யப்பட்டதான ஆதனம் எதுவும்—

(அ) இயைபான குற்றத்தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு எதுவும் செய்யப்பட்டிராவிடின், அத்தகைய குற்றத்தீர்ப்புக்கெதிராக மேன்முறையீடொன்றைச் செய்வதற்கென விதித்துரைக்கப்பட்டுள்ள காலப்பகுதி எந்தத் தேதியில் முடிவடைகின்றதோ அந்

தத் தேதியிலிருந்து பூரணமாக அரசுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும் ;

(ஆ) இயைபான குற்றத்தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடொன்று செய்யப்பட்டிருப்பின், எந்தத் தேதியன்று அத்தகைய குற்றத்தீர்ப்பு மேன்முறையீட்டின்மீது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதோ அந்தத் தேதியிலிருந்து பூரணமாக அரசுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

இவ்வுட்பிரிவில், "இயைபான குற்றத்தீர்ப்பு" என்பது, எந்தக் குற்றத்தீர்ப்பின் விளைவாக ஏதேனும் ஆதனமானது (1) ஆம் உட்பிரிவின்கீழ் அரசுக்கு இழப்பிக்கச் செய்யப்பட்டதோ அந்தக் குற்றத்தீர்ப்பு என்று பொருள்படும் :

ஆயின், எவ்வாறாயினும், எந்தப் பதார்த்தம் அல்லது பொருள் தொடர்பில் தவறு புரியப்பட்டதோ, அந்தப் பதார்த்தம் அல்லது பொருள் அல்லது தவறு புரிகையில் அல்லது அது சம்பந்தமாகப் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் வாகனம், கலம், படகு, மரக்கலம், எந்திரத் தொகுதி அத்துடன் மற்றும் உபகரணம், தவறுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளுக்கு அல்லாமல் வேறு ஆளுக்குச் சொந்தமாகும் என எண்பிக்கப்படின் அத்துடன், அந்த வேறு ஆள் அத் தவறு தொடர்பில் அல்லது தவறு புரிதல் சம்பந்தமாகப் பயன்படுத்தப்படும் என்று தாம் அறிந்திருக்கவில்லை என நீதிமன்றத்தைத் திருப்திப்படுத்தினால் நீதிமன்றமானது அத்தகைய ஏதேனும் பதார்த்தத்தை அல்லது பொருளை அல்லது வாகனத்தை, கலத்தை, படகை, மரக்கலத்தை, எந்திரத் தொகுதியை அத்துடன் உபகரணத்தை விடுவிக்கும் கட்டளையை ஆக்கலாம்.".

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு, அதன் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(2) பிரிவு 31அ(1) அல்லது 31இ என்பதன் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனும் ஆள்,".

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவானது அவ்வுட்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்த்துக்கொள்வதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(5) பணிப்பாளரானவர், ஏதேனும் முட்டுக்கட்டை அல்லது தடை முனையப்பட்டுள்ளது அல்லது முனையப்படக்கூடும் என்பது காரணமாக, இதனகத்து முன்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு ஏதேனும் கட்டமைப்பை, வீட்டை, குடிசையை, கொட்டிலை அல்லது வேறு கட்டிடத்தை இடித்தழிக்க முற்பட இயலாதவராகவுள்ளவிடத்து அல்லது இயலாதவராகவிருப்பாரென அஞ்சுகின்றவிடத்து, பணிப்பாளர் எந்த இடத்தில் கட்டமைப்பு, வீடு, குடிசை, கொட்டில் அல்லது வேறு கட்டிடம் அமைந்துள்ளதோ அந்த இடத்தின்மீது நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள நீதிவான் நீதிமன்றத்திற்கு அதன்சார்பில் விண்ணப்பமொன்றைச் செய்த தன்மேல், விடயத்திற்கு ஏற்றுற்போல அத்தகைய கட்ட

மைப்பை, வீட்டை, குடிசையை, கொட்டிலை அல்லது வேறு கட்டிடத்தை இடித்தளிக்கும்படி பிசுக்காலைப் பணிக்கின்றதான அந்த நீதிமன்றத்தின் கட்டளையொன்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(6) நீதிவான் நீதிமன்றத்தால் (1) ஆம் உட்பிரிவின்கீழ் பிசுக்காலுக்குக் கட்டளையொன்று வழங்கப்பட்டுள்ளவிடத்து, அவர் அத்தகைய கட்டளையை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்பதுடன் அத்தகைய கட்டளை நிறைவேற்றப்பட்ட முறையை நீதிமன்றத்துக்கு எழுத்தில் அறிவித்தலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 31அ, 31ஆ 31இ, 31ஈ, 31உ, 131ஊ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்தல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் 31அ, 31ஆ, 31இ, 31ஈ, 31உ, 31ஊ ஆகிய பிரிவுகளாகப் பயனுடையனவாதலும் வேண்டும் :—

"கரையோர வலயத்தினுள் முருகைக்கல் தோண்டுதல், சேகரித்தல் முதலியவற்றின் மீதான தடை.

31அ. (1) கரையோர வயலத்திற்குள் ஆளெவரும்—

(அ) முருகைக் கல்லை எத்தகையதுமான எவ்வடிவத்திலும் தோண்டுதல், சேகரித்தல், உடைமை கொள்ளல், பதப்படுத்துதல், களஞ்சியப்படுத்தல், எரித்தல், இடம் பெயர்த்தல் ஆகியவற்றில் ஈடுபடுதலாகாது ;

(ஆ) முருகைக்கற்களை எரிப்பதற்கும், பதப்படுத்துவதற்குமான சூளையைச் சொந்தமாக வைத்திருத்தல், உடைமை கொள்ளுதல், இருப்பாட்சி கொள்ளுதல், வாடகைக்கு விடுதல், குத்தகைக்கு விடுதல், வைத்திருத்தல் அல்லது தொழிற்படுத்துதல் ஆகாது ;

(இ) முருகைக்கற்களைத் தகர்க்கும் நோக்கத்திற்கென ஏதேனும் சாதனத்தை, எந்திரத்தொகுதியை, பொருளை அல்லது பதார்த்தத்தைப் பயன்படுத்துதலாகாது ; அத்துடன்

(ஈ) எவையேனும் முருகைக்கற்களைத் தகர்த்தலில் அல்லது இடம்பெயர்த்தலில் அல்லது தகர்த்தல், இடம்பெயர்த்தல் ஆகியன சம்பந்தமாக ஏதேனும் வாகனத்தை, மரக்கலத்தை அல்லது படகைப் பயன்படுத்துதல் ஆகாது :

ஆயின், எவ்வாறாயினும், பணிப்பாளரானவர் அதன் சார்பில் வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின் கீழ், அறிவியல் ஆய்வு நோக்கத்திற்காக முருகைக்கல்லை அகற்றுவதற்கு அனுமதிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுவதாக ஏதேனும் வாகனம், கலம், படகு, மரக்கலம், அல்லது வேறு சாதனம் எந்திரத்தொகுதி பயன்படுத்தப்படுகின்றவிடத்து, எவரேனும் பொலிசு அலுவலர் அத்த

கைய ஏதேனும் வாகனத்தை, கலத்தை, மரக்கலத்தை, படகை, சாதனத்தை அல்லது எந்திரத் தொகுதியை அதன்மீது காணப்படும் ஏதேனும் பொருளுடன் அல்லது பதார்த்தத்துடன் சேர்த்து கைப்பற்றுவதற்குத் தத்துவமுடையவராதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் கைப்பற்றப்பட்ட வாகனம், கலம், மரக்கலம் படகு, சாதனம் அல்லது எந்திரத்தொகுதி எதுவும் அத்தகைய விடுவிப்புக்கான நீதிமன்றக் கட்டளையொன்று பெறப்பட்டாலன்றி, விடுவிக்கப்படலாகாது.

(4) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக கரையோர வலயத்தினுள் களஞ்சியப்படுத்தி வைத்திருக்கப்பட்ட அல்லது குவித்து வைத்திருக்கப்படக் காணப்படும் முருகைக் கற்களைப் பறிமுதல்செய்வதற்கு எவரேனும் பொலிசு அலுவலர் தத்துவம் கொண்டவராதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு காணப்படும் அத்தகைய ஏதேனும் முருகைக்கல், பணிப்பாளருக்கு அல்லது அவரது பிரதிநிதிக்குக் கையளிக்கப்படலும் வேண்டும் அல்லது பணிப்பாளரினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான ஏதேனும் முறையில் கையுதிர்க் கப்படலும் வேண்டும்.

தவறுபுரியப் பட்ட இடம் பற்றிய பணிப் பாளரினலான சான்றிதழ் முதற்றோற்ற அளவிலான சான்றுதல்.

31ஆ. முப்பத்தொன்று அ என்னும் பிரிவில் குறிப்பிடுசெய்யப்பட்ட செயல்கள் கரையோர வலயத்தினுள் இடம்பெற்றன என்னும் ஒரு கூற்றைக் கொண்டிருப்பதும் பணிப்பாளரின் கைப்பட வழங்கப்பட்டதுமான ஒரு சான்றிதழ், அதனகத்துக் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வுகள்பற்றிய முதற்றோற்ற அளவிலான சான்றுதல் வேண்டும்.

கரையோர வலயத்தினுள் உள்ள சூளைகளை அழித்தல்.

31இ. கரையோர வலயத்தினுள் ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சூளைகளைச் சொந்தமாக வைத்திருக்கும் அல்லது உடைமைகொள்ளும் ஆள் ஒவ்வொருவரும், இப்பிரிவு நடைமுறைக்கு வந்த முப்பது நாட்களுக்குள் அத்தகைய சூளைகளை அழித்தல் வேண்டும் அல்லது அத்தகைய சூளைகளை அழிக்கச்செய்தல் வேண்டும்.

கடற்கரைக் கான உரித்துவத்தை, உடைமை கொள்ளுவதன் மூலமோ பயன் பாட்டின் மூலமோ கொள்ள முடியாது.

31ஈ. (1) ஆள் எவரும், கடற்கரையின் குறிப்பிடப்பட்ட ஏதேனும் பகுதியை உடைமை கொள்ளும் அல்லது பயன்படுத்தும் காரணத்தினால் கடற்கரையின் அத்தகைய பகுதிக்கான உரித்துவத்தை அரசுக்கெதிராகக் கொண்டுள்ளாரென உரிமைகோருதல் ஆகாது.

(2) (அ) தீவின் எப்பாகத்திலும் கடற்கரையை அடக்கியுள்ள இடப்பரப்பு சம்பந்தமான ஏதேனும் பிணக்கில் குறிப்பிட்டவோர் இடப்பரப்பு கடற்கரையின் பகுதியாக அமையும் எனும் கூற்றொன்றைக்

கொண்டிருப்பதான பணிப்பாளரினால் அல்லது அதற்கென அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஓர் ஆளினால் ஒப்பமிடப்பட்ட ஒரு சான்றிதழானது அதனகத்துக் குறிப்பிடப்பட்ட நிகழ்வுகள் பற்றிய முதற்றோற்ற அளவிலான சான்றாதல் வேண்டும்.

(ஆ) பந்தி (அ) என்பதன்கீழ் ஒரு சான்றிதழை வழங்கும் நோக்கத்திற்கான ஒரு தீர்மானத்திற்கு வருகையில், பணிப்பாளர் அல்லது அதற்கென அவரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆள் கரையோரக் கோடு வழியாக வேறு இடப்பரப்புகளிலிருந்து தூர கரையோரப் போக்குவரத்துமூலம் கொண்டுவரப்பட்ட மணற்படிவுகளினால் கரையோரத் தோடு நெடுகே ஏற்படுத்தப்பட்ட சேர்மானத்தின் அளவைக் கருத்திற்கொள்ளுதல் வேண்டும்.

(இ) தனியார் ஆதனத்துக்கு அணித்தாயுள்ள சேர்மானங்கள் இச்சட்டத்தின் நோக்கத்துக்காக அரசிற்குச் சொந்தமானவையாகக் கருதப்படல் வேண்டும்.

(3) இப்பிரிவின் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகளில் எது எப்படியிருப்பினும் கடற்கரையின் எப்பாகத்தையும் பயன்படுத்தவோ அல்லது துய்க்கவோ பொதுமக்களுக்கு உரிமை இருத்தல் வேண்டும்.

மணலையும் கடற்சிப்பிகளையும் இடம் பெயர்த்தல்.

31உ. (1) மணலையும் கடற் சிப்பிகளையும் இடம் பெயர்க்கும் அல்லது இடம்பெயர்ப்பதாகச் சந்தேகிக்கப்படும் ஏதேனும் வாகனத்தை, கலத்தை, படகை அல்லது மரக்கலத்தைப் பரிசோதனை செய்யும் தத்துவம் எந்தவொரு பொலிசு அலுவலருக்கும் இருத்தல் வேண்டும்.

(2) அத்தகைய மணலும் கடற்சிப்பிகளும் சட்டமுறையாகவே பெறப்பட்டன என்பதனை எண்பிக்கும் பொறுப்பு அத்தகைய மணலையும் கடற் சிப்பிகளையும் இடம்பெயர்க்கும் ஆளுக்குரியதாகும்.

குற்றப்பணங்களில் ஐம்பது சதவீதம் பொலிசு வெகுமதி நிதியத்திற்கு வரவிடப்படுதல் வேண்டும்.

31ஊ. குற்றப்பணங்கள் என்ற வகையாகப் பெறப்பட்ட பணங்களில் ஐம்பது சதவீதம் பொலிசுக் கட்டளைச் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட பொலிசு வெகுமதி நிதியத்திற்கு வரவிடப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 35அ, 35ஆ, 35இ ஆகிய புதிய பிரிவுகளை உட்புகுத்தல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை அச்சட்டவாக்கத்தின் 35அ, 35ஆ, 35இ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"பிடியாணையின்றி கைது செய்வதற்கு பொலிசு அலுவலருக்கு உள்ள தத்துவம்.

35அ. (1) ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட ஒரு காலத்திற்கு மறியற்றண்டனை விதிக்கப்படற்பாலதான இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறைப் புரிவதில் தொடர்புபட்டிருக்கின்றார் அல்லது சம்பந்தப்பட்டிருக்கின்றாரென நியாயமாகச் சந்தேகிக்கப்படும் எவரேனும் ஆளை, அத்தகைய ஆள் அவரது பெயரை அல்லது முகவரியைக் கொடுக்க மறுப்பின் அல்லது அது பொய்யானது என, அவர் நம்புவதற்குக் காரணம் இருக்கக்கூடிய ஒரு பெயரை அல்லது முகவரியைக் கொடுத்திருப்பின் அல்லது அத்தகைய ஆள் தலைமறைவாக இருப்பாரென நம்புவதற்குக் காரணமிருப்பின், நீதிவானிடமிருந்து பெறப்பட்ட கட்டளைகளில்லாமலும், பிடியாணையொன்றில்லாமலும், எவரேனும் பொலிசு அலுவலர் கைது செய்யலாம்.

(2) இப்பிரிவின்கீழ் ஆளொருவரைக் கைதுசெய்யும் ஒவ்வொரு பொலிசு அலுவலரும் அவசியமற்ற தாமதமின்றி, குற்றஞ்சாட்டப்பட்டவர் எந்தத் தவறுக்குக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளாரோ அந்தத் தவறைக் கூறுவதான கூற்றொன்றுடன் சேர்த்து, மிக அண்மையிலுள்ள பொலிசு நிலையத்திற்கு கைதுசெய்த ஆளை அழைத்துச்செல்லல் அல்லது அனுப்பிவைத்தல் வேண்டும். பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் அவசியமற்ற தாமதமின்றி கைதுசெய்யப்பட்ட ஆளை மிக அண்மையிலுள்ள நீதிவானிடம் அழைத்துச் செல்லல் அல்லது அனுப்பிவைத்தல் வேண்டும்.

தவறுபுரியப்படுவதைத் தடுப்பதற்கு பொலிசு அலுவலருக்குள்ள தத்துவம்.

35ஆ. ஒவ்வொரு பொலிசு அலுவலரும் இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறு புரியப்படுவதைத் தடுத்தல் வேண்டுமென்பதுடன், புரியப்படுவதைத் தடுக்கும் நோக்கத்துக்கெனத் தலையிடவும் செய்யலாம்.

பொலிசு அலுவலர்களுக்கு முட்டுக் கட்டையிடுவதற்கான அல்லது தலையிடுவதற்வதற்கான தண்டம்.

35இ. இச்சட்டத்தின்கீழான அவரது தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கையில், புரிகையில் அத்துடன் நிறைவேற்றுகையில் ஒரு பொலிசு அலுவலரை அல்லது அதன்சார்பில் செயலாற்றுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் அலுவலரை அச்சுறுத்துகின்ற, பயமுறுத்துகின்ற அல்லது அவருக்கு முட்டுக்கட்டையிடுகின்ற அல்லது எவ்வகையிலும் அவருடன் தலையிடுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆறு மாதங்களுக்கு மேற்படாத காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு, அல்லது ஆயிரம்

ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனைக்கு, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும் :

ஆயின், பொலிசுக் கண்காணிப்பாளர் தரத்திற்குக் குறையாதவொரு தரத்திலுள்ள அலுவலரின் அனுமதி யுடனன்றி இப்பிரிவின்கீழ் குற்றவழக்கொன்று தொடரப்படுதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவைத் திருத்துதல்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

(1) "கரையோரம்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்திற்கு நேர்முன்பாக பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :—

"கடற்கரை" என்பது, உயர்ந்த நீர் எழுச்சித்தள அளவிலிருந்து நிலம்நோக்கி, பௌதிகவியல் வடிவத்தில் பொருளளவிலான அல்லது இயற்கையான குறிப்பிடத்தக்க மாற்றம் உள்ள இடப்பரப்பு வரைக்கும், அல்லது நிரந்தர தாவர இனங்கள் காணப்படுகின்ற கோடுவரைக்கும் விசாலித்திருப்பதான திரளாப் பொருளை, முக்கியமாக மணலைக்கொண்ட மென்மையான இறங்கிக்கொண்டு போகும் இடப்பரப்பு என்று பொருளாகும். பொருளளவிலான அல்லது இயற்கையான பௌதிகவியல் மாற்றம் குறிப்பிடத்தக்கவகையில் காணப்படாத விடயங்களில், உயர்ந்த எழுச்சித் தளமட்டத்திலிருந்து நிலம்நோக்கி 20 மீட்டர் தூரம்வரை அல்லது சராசரி உயர்ந்த நீர் எழுச்சித் தளமட்ட அளவுக்கு மேல் 2·5 மீட்டர் மட்டம்வரை, இவற்றுள் எது குறைந்ததோ அதுவரை, கடற்கரை விசாலிப்பதாகக் கருதப்படல் வேண்டும்.;"; அத்துடன்

(2) "அபிவிருத்திச் செயற்பாடு" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும் :—

"அபிவிருத்திச் செயற்பாடு" என்பது எந்த விதத்திலும் கரையோர வலயத்தின் பௌதிகவியல் தன்மையை மாற்றக்கூடிய சாத்தியங்கொண்ட ஏதேனும் மனிதச் செயற்பாடு எனப் பொருளாகும் என்பதுடன், கட்டிடங்களையும் கட்டுவேலைகளையும் நிர்மாணித்தல், கழிகால்களில் இருந்து, கலங்களிலிருந்து, அல்லது வேறு வழிகளிலிருந்து வரும் கழிவுப் பொருட்களை அல்லது வேறு பொருட்களைப் போடுதல், மணலை, கடற்சிப்பிகளை, இயற்கைத் தாவரங்களை, கடற்பாசியை அத்துடன் வேறு பதார்த்தங்களை எடுத்துச்செல்லுதல், சேறு வாருதலும் நிரப்புதலும், காணி மீட்டல், கனிப்பொருள்களுக்காகச் சுரங்கமறுத்தல் அல்லது துளைத்தல் என்பவற்றையும் உள்ளடக்கும், ஆனால், கடற்றொழிலை உள்ளடக்காது.".